64. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 29—11—1983 ஆம் நாளிட்ட 1020 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

65. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 10—10—1983 ஆம் நாளிட்ட 2100 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

66. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் வழங்கல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத்துறையின் 5—9—1983 ஆம் நாளிட்ட 1435 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

67. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து 61 வண்டிகளை சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றுதல் தொடர்பான செயலின் மூலம் செலுத்தப்படும் வரியினை தள்ளிவைத்தல் தொடர்பாக வணிகவரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 3—5—1983 ஆம் நாளிட்ட 484 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

68. தமிழ்நாடு வன விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வன-மீன்வளத் துறையின் 22—9—1983 ஆம் நாளிட்ட 1151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5 1982) 64 (A) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிவிக்கைகள், அறிவிப்புகள்; ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 3—3—1983 முதல் 27—4—1983 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமித்தல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1983.)

1984 பிப்ரவரி 14]

3. 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1983.)

4. 1983 ஆம் ஆண்டு பச்சையப்பன் அறக்கட்டளை (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 17/1983.)

5. 1983 ஆம் ஆண்டு மதுரை சுகர்ஸ் லிமிடெட் (நிறுவனத்தை கையகப்படுத்தல்—மாற்றுதல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 18/1983.)

6. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம் மற்றும் சிறப்பு விதிகள்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 19/1983.)

7. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சினிமாக்கள் (ஒழுங்கு முறை விதிகள்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1984).

8. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரெக்காடர்கள் மூலமாக தொலைக்காட்சித் திரையில் திரைப் படங்கள் காட்டுதல் (ஒழுங்கு முறை விதிகள்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 2/1984).

9. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1984).

10. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணியர் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 4/1984).

11. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழகம் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 5/1984).

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
1 SEP 1984
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS